டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.10.2026 புதன்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 091 | Madurai | Online Edition

# தமிழகத்தில் 19 மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்.6

தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், மதுரை உள்பட 19 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இன்று (அக்.7) மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தெற்கு கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதேபோல, வட தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, மன்னார் வளைகுடா முதல் மத்திய மகாராஷ்டிரா வரை, தமிழகம் மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று (அக்.7) நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, ஈரோடு, சேலம் ஆகிய 19 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். மற்ற தமிழக பகுதிகளில் ஒரு சில இடங்களிலும் மற்றும் புதுச்சேரியில் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.8-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை,

தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய 11 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.9-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி ஆகிய 3 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும். திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்பட 23 மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.10-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் தேனி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும். ஈரோடு, நாமக்கல், சேலம், திருச்சி உள்பட 16 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (அக்.7) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சம்பா பருவ நெல் வயலில் விஞ்ஞானிகள் குழு வயல் ஆய்வு



கடலூர், அக்.6

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 06.10.2026 அன்று விருத்தாசலம் மற்றும் முஷ்ணம் வட்டாரத்தில், வண்ணான்குடிகாடு, அக்ரவாரம், இராஜேந்திரப்பட்டினம் ஆகிய கிராமத்தில் வயலில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பருவ நெல் வயல்களை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், தலைமையில் விஞ்ஞானி முனைவர் கோ. சத்தியநாரயணன், ஆகியோர் அடங்கிய குழு 10க்கும் மேற்பட்ட சம்பா பருவ நெல் வயல்களை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். மேற்கண்ட சம்பா பருவ நெல் வயல்களில், பாசிதாக்கம் அதிகம் காணப்படுவதால் பாசி வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வயல்களில் அதிக நீர் தேக்கத்தை தவிர்த்து, பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப 2-3 செ.மீ. நீர் மட்டத்தைப் பராமரிக்கவும், நாற்றுகள் நன்கு நிலை பெற்ற பிறகு கோனோவீடர், மூலம் வரிசைகளுக்குகிடையே இயக்கி பாசிகளை உடைத்து மண்ணில் கலக்கவும், அதிக படர்ந்த பாசிகளை கை அல்லது வலைகள் மூலம் சேகரித்து அகற்றவும், தேவையெனில் காப்பர் சல்பேட் @ 1 கிலோ ரூ.10 கிலோ மணல், எக்கர் கலந்து சாக்கு பைகளில் வைத்து, பாசன வாய்க்காலில் பயன்படுத்தவும், அதிகபடியான தழை மற்றும் மணிசத்து உரங்களை தவிர்த்து பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டும் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் தொடர்பான பயிற்சி



மதுரை, அக்.6

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரம் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் அறுவடைக்குப்பின் மேலாண் மற்றும் மதிப்பு கூட்டல் குறித்து வேளாண்மை அலுவலர் மீனா தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது செல்லம்பட்டி வட்டாரம் பூதிபுரம் கிராமத்தில் 6.10.2026 அன்று பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண் அலுவலர் வேளாண்மை துறை திட்டங்கள் சம்பந்த மாகவும், மானிய விவரங்கள் சம்பந்தமாகவும், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த விரிவான விளக்கங்களை எடுத்துரைத்தார்.

அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் விதைகளின் விவரங்களையும், நுண்ணூட்ட உரம் திரவ உயிர் உரம், சூடோமோனாஸ் ஆகியவற்றை பயன்படுத்தும் முறை களையும் அவற்றின் பயன்களையும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஓய்வு பெற்ற வேளாண் அலுவலர் குணசேகரன் கலந்து கொண்டு பயிற்சி பற்றிய முழு தொழில்நுட்ப உரைகளையும் மற்றும் செயல் விளக்கங்களையும் செய்து காட்டி விளக்கினார். மேலும் செல்லம்பட்டி வட்டார அட்மா திட்ட வட்டார ஆலோசனை குழு தலைவர் எம்.பி.ராமன் கலந்து கொண்டு வேளாண் சார்ந்த கருத்துக்களை எடுத்துரைத்தார்.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் சண்முகப்பிரியா பயிர் கணக்கெடுப்பு முறை மற்றும் விவசாயி அடையாள அட்டை குறித்த விளக்கங்களை கூறினார். செயல் விளக்க திடலுக்கான ஏற்பாடுகள் மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பழனி, சிவபாண்டி ஆகியோர் செய்திருந்தனர்.

# அட்மா திட்டத்தில் மாவட்ட அளவிலான பயிற்சி




சேலம், அக்.6

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரம் வேப்பிலைப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் மாவட்ட அளவிலான பயிற்சி 05.10.26 அன்று சமச்சீர் உர மேலாண்மை என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில் பழனியப்பன், வேளாண்மை இணை இயக்குனர் (ஓய்வு) மண் பரிசோதனை மற்றும் சமச்சீர் உர மேலாண்மை பற்றிய தொழில் நுட்பங்களை கூறினார். வாழப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன், உயிர் உரங்களின் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சண்முகப்பிரியா, விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் அவசியம் பற்றி கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திரசேகரன், அனைத்து விவசாயிகளையும் வரவேற்று பேசினார் மற்றும் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிப்பு பற்றிய தொழில் நுட்பங்களை எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு விவசாயிக்கும் ஊக்கத்தொகை ரூ.250 அவர்களுடைய வங்கி கணக்கிற்கு ஹிசிய்வீ மூலம் வழங்கப்பட்டது மற்றும் மதிய உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் திலகவதி ஏற்பாடு செய்து நன்றி உரை கூறினார்.

# சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் திறனை அதிகரித்தல் பற்றிய தொழில் நுட்ப பயிற்சி



புதுக்கோட்டை, அக்.6

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை வாயிலாக செயல் படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ்-2026-27ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி தலைப்பு சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் உர பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் பற்றிய தொழில்நுட்ப பயிற்சி அமரடக்கி கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஆவுடையார் கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) சி சவிதா, தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப் பாடு (பொறுப்பு) முகமது ரபி, கலந்து கொண்டு. மண் வளத்தை மேம்படுத்துவதற்கான உர பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் உரங்களை பயன்படுத்தும் போது தேவையான உரங்களை சமச்சீர் முறையில் பயன்படுத்த வேண்டும் மற்றும் தேவைக்கு அதிகமான உரங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மேலும் தழைசத்தை குறைந்த அளவில் பயன்படுத்த வேண்டும். பேரூட்டங்கள் மட்டும் பயன்படுத்தாமல் நுண்ணூட்டங்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டும், உப்பு தன்மை கொண்ட வயல் களில் ஜிப்சம் ஏக்கருக்கு 200 கிலோ பயன்படுத்தி இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். மண் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் பயிர்கள் பயிரிட்டு மடக்கி உழுவதன் மூலம் மண்ணில் கரிமச்சத்து அதிகரிக்கிறது. ஆகையால் உரச் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம் என தொழில்நுட்பங்கள் வழங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் ஆவுடையார்கோவில் கலந்து கொண்டு வேளாண்மைத்துறை மூலம் தற்போழுது செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றியும் வேளாண் கிடங்கில் உள்ள இருப்புகள் பற்றிய தகவல்களை

விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் உயிர் உரங்கள் பயன்படுத்தும் முறைகள் அதன் நன்மைகள் பற்றியும் நெற்பயிரில் தழைச்சத்து குறைத்து இடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சியில் ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் இருந்து பல்வேறுபட்ட கிராமங்களிலிருந்து 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜகுபர் அலி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கீர்த்திகா ஆகியோர்கள் செய்திருந்தனர்.



# மன்னார்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வேளாண் கல்லூரி மாணவிகள் களப்பயிற்சி




நாகப்பட்டினம், அக்.6

நாகை மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், தங்களது ஊரக வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக மன்னார்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (ADA) அலுவலகத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

இக்களப்பயணத்தின் போது, வேளாண்மை அலுவலர் (AO) கிரிஜாவை மாணவிகள் நேரில் சந்தித்து கலந்தாலோசித்தனர். அப்போது, மன்னார்குடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளின் விவரங்கள், சாகுபடி முறைகள், பயிர் விவரங்கள் மற்றும் அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் குறித்த முக்கிய புள்ளி விவரங்களை அதிகாரியிடமிருந்து சேகரித்துத் தெரிந்துகொண்டனர்.

இப்பயிற்சியின் மூலம் வட்டார அளவில் விவசாயிகளின் தரவுகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்ற தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கான அடிப்படை அனுபவத்தை மாணவிகள் பெற்றனர்.



ஸ்ரீ சக்தி பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியில் 6/10/2026 அன்று உணவு தொழில்நுட்ப துறை சார்பாக உணவு திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழா மாணவர்களின் உணவு பதனிடல் சம்பந்தமான 14 தொழில்நுட்பங்கள் பதிவிடப்பட்டன. இவ்விழாவிற்கு தங்கவேலு தலைமை உரையாற்றினார்.

# பூச்சிகளின் பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை

**அறிமுகம்**

பூச்சிகளை கட்டுப்படுத்த தொடர்ந்து ஒரே வகையான அல்லது ஒரே செயல்முறை கொண்ட பூச்சிக்கொல்லிகளைப் பயன் படுத்தும்போது, சில பூச்சிகள் அதற்கு எதிர்ப்புத் தன்மையைப் பெறுகின்றன. இதனால், முன்பு பயனுள்ளதாக இருந்த பூச்சிக்கொல்லியின் பரிந்துரைக்கப்பட்ட அளவு பின்னர் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது. இத்தகைய நிலையே பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை எனப்படுகிறது. இது பயிர் பாதுகாப்பில் முக்கியமான பிரச்சினையாகும்.

**பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை உருவாகும் காரணங்கள்**

- ஒரே பூச்சிக்கொல்லியை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல்.
- அதிக அளவு அல்லது தவறான அளவில் பூச்சிக் கொல்லியைப் பயன்படுத்துதல்.
- ஒரே செயல்முறை கொண்ட பூச்சிக்கொல்லிகளை தொடர்ந்து பயன்படுத்துதல்.
- தேவையற்ற நேரங்களில் பூச்சிக்கொல்லிகளை தெளித்தல்.
- பூச்சிகளின் வேகமான இனப்பெருக்கம் மற்றும் மரபணு மாற்றங்கள்.

**பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மையின் முக்கிய வகைகள்**

- **உடலியல் எதிர்ப்பு :** பூச்சியின் உடலில் ஏற்படும் மாற்றங்களால் பூச்சிக்கொல்லி செயலிழத்தல்.
- **நடத்தை சார்ந்த எதிர்ப்பு :** பூச்சிகள் பூச்சிக்கொல்லி படிந்த பகுதிகளைத் தவிர்த்தல்.
- **குறுக்கு எதிர்ப்பு :** ஒரு பூச்சிக்கொல்லிக்கு ஏற்பட்ட எதிர்ப்பு, அதே செயல்முறை கொண்ட மற்றொரு பூச்சிக்கொல்லிக்கும் ஏற்படுதல்.
- **பல்மருந்து எதிர்ப்பு :** வெவ்வேறு செயல்முறை கொண்ட பல பூச்சிக்கொல்லிகளுக்கும் எதிர்ப்பு உருவாகுதல்.

**எதிர்ப்புத் தன்மையைத் தடுக்கும் முறைகள்**

- ஒரே பூச்சிக்கொல்லியை தொடர்ந்து பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

● வெவ்வேறு செயல்முறை கொண்ட பூச்சிக்கொல்லிகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்த வேண்டும்.

● பரிந்துரைக்கப்பட்ட அளவு மற்றும் சரியான நேரத்தில் மட்டும் தெளிக்க வேண்டும்.

● தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும்.

● ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையைப் பின்பற்ற வேண்டும்.

● உயிரியல் கட்டுப்பாடு, இயந்திரக் கட்டுப்பாடு மற்றும் பண்பாட்டு முறைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

**பூச்சிக்கொல்லி எதிர்ப்பை கண்காணித்தல்**

பூச்சிக்கொல்லி பயன்பாட்டிற்குப் பிறகும் பூச்சிகளின் உயிர் வாழ்வு மற்றும் எண்ணிக்கையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். வயல் கண்காணிப்பு மற்றும் உயிரியல் பரிசோதனைகள் மூலம் எதிர்ப்புத் தன்மை உருவாகியுள்ளதா என்பதை அறியலாம். எதிர்ப்பு கண்டறியப்பட்டால், அதே செயல் முறை கொண்ட பூச்சிக்கொல்லியை மீண்டும் பயன்படுத்தாமல் மாற்று மேலாண்மை முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை பயிர் பாதுகாப்பின் செயல்திறனை குறைக்கும் முக்கிய பிரச்சினையாகும். இதனைத் தடுக்க பூச்சிக்கொல்லிகளின் முறையான பயன்பாடு, செயல்முறை மாற்றம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) ஆகியவற்றை கடைப்பிடிப்பது அவசியம். இதன் மூலம் பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைத்து, நீடித்த மற்றும் பாதுகாப்பான பயிர் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

கட்டுரை ஆசிரியர் : *ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர்பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.*



மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மண்ணில் கார்பன் - நைட்டிஜன் (C:N RATIO) விகிதாச்சாரத்தின் முக்கியத்துவம் என்ன?




நமது நாட்டில் 1940களில் விளைநிலங்களில் உள்ள மண்ணில் கரிம (கார்பன்) சாரசரியாக 3% மேலாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில நம்முடைய விவசாயம் முழுக்க முழுக்க இயற்கை விவசாயமாக (NATURAL FARMING) இருந்தது. அப்போதிருந்த மக்கள் தொகைக்கு அதில் கிடைத்த உணவு பொருளே போதுமானதாக இருந்தது. பிறகு நாடு சுதந்திரமடைந்த பின், ஏகப்பட்ட பஞ்சங்கள், பட்டினி சாவுகளை நாம் சந்தித்தோம். அதிலிருந்த விடுபட பசுமை புரட்சி வந்தது.

**பசுமை புரட்சியின் விளைவுகள் (GREEN REVELATION)?**

வீரிய ஓட்டுரக விதைகள் நெல், கோதுமையில் வந்தது. உணவு தானிய உற்பத்தியில் தற்சார்பு நிலை அடைந்து, அதை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வளர்ந்து விட்டோம் என்று இறுமாப்புடன் மார் தட்டுகிறோம்.

**தற்போதைய மண்ணில் (C:N) RATIO என்ன நிலை தெரியுமா?**

தற்போதைய சூழலில் நம்முடைய மண்ணில் சாரசரியாக 0.1% குறைவாக தான் கரிம சத்து (கார்பன்) உள்ளது. இதனால் தான் என்னவோ அன்று அள்ளிக்கொடுத்த மண் இன்று மகசூலை கிள்ளிக் கொடுக்கிறது.

**மண்ணின் (C:N) RATIO**

பொதுவாக மண்ணில் கார்பன் – நைட்டிஜன் விகிதம் 10:1 என்ற அளவில் தான் இருக்கும் என்பது அறிவியல் பூர்வமாக

நிர்ணயிக்கப்பட்ட அளவு (CONSTANT). மண்ணில் தழைசத்து பிடிமானம் எப்போதும் மண்ணிலுள்ள கரிம சத்தின் (கார்பன்) அளவை பொருத்து தான் மாறுபடுகிறது என்பது பலருக்கும் தெரியாது.

எடுத்துக்காட்டாக ஒரு ஏக்டர் ஏர் உழவு (15 செ.மீ) ஆழம் மண்ணில் 10 கிலோ கார்பன் இருந்தால், அதில் அதிகபட்சமாக 1 கிலோ தழை சத்தை தான் அந்த மண்ணில் நிலைநிறுத்த முடியும். இந்த மண்ணில் 100 கிலோ கரிம சத்து (கார்பன்) கொண்ட ஒரு எக்டர் உழவு மண்ணில் 46 கிலோ தழை சத்து (அதாவது 100 கிலோ யூரியாவை பயிர் சாகுபடிக்கு இட்டால் அதில் 10 கிலோ தழை சத்தை மட்டும் மண்ணில் நிலைநிறுத்த முடியும். எஞ்சிய தழை சத்துகள் தண்ணீரில் கரைந்தும், ஆவியாகியும் வீணாகும். அதாவது 10:1 என்ற C.N.RATIO CONSTANT என்பது குறிப்பிடத்தக்கது.

மண்ணில் 460 கிலோ கரிம சத்து மண்ணில் குறைந்த பட்சமாக இருக்க வேண்டும். அப்படி நிலைநிறுத்தபட்டால், தழை சத்தின் அளவும் பயிர் வளர்ச்சி காலங்களில், (பருவங் களில்) மண்ணில் நிரந்தரமாக இருப்பதில்லை. ஏனெனில் மண்ணில் ஒரு புறம் நடைபெறும் (OXIDATION) மற்றும் மண்ணிலுள்ள நுண்ணியிர்களின் கார்பன் (கரிமத்தின் அளவு) பயன்பாட்டின் மூலமாக கார்பன் அளவு குறைந்து கொண்டே இருக்கிறது. மறுபுறம் நாம் மண்ணிலிட்ட தழை சத்தின் அளவும் நீரில் கரைந்து வடிதல், ஆவியாதல் போன்ற நிகழ்வில் குறைந்து கொண்டே இருக்கிறது.

**இதிலிருந்து என்ன தெரிகிறது நமக்கு?**

30-40 வருடத்திற்கு முன்னாடி ஒரு மூட்டை யூரியா உரத்தை இட்டால், நல்ல மகசூல் எடுத்த நிலத்தில் இன்று 10 மூட்டை யூரியாவை கொட்டினாலும் அன்று எடுத்த மகசூலை இன்று எடுக்க முடியவில்லையே என நாம் சலித்து கொள்ளுவதை கண்கூடாக பார்க்கிறோம். அன்று மண்ணுக்கு உரமிட்டோம், ஆனால் இன்றைக்கு மண்ணை மலடாக்கி பயிருக்கு தான் போட்டி போட்டு உரமிடுகிறோம். இதனால் மண்ணிலுள்ள அடிப்படை நுண்ணுயிர்கள் மண்புழுக்கள் இல்லாத நிலை தான். மண்ணில் கரிம சத்தை அதிகரிக்க நடவடிக்கை நாம் மேற் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் தான் மண் மகசூலை அள்ளிக் கொடுக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மரக்கன்றுகளை நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்!



ஈரோடு, அக்.6

சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், வளரும் தலைமுறையினரிடையே மரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், ஈரோடு மாவட்டம், பங்களாப்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஜே.கே.கே. முனிராஜா வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில் மரக்கன்று நடும் விழா மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது. கல்லூரி மாணவர்களின் கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக நடைபெற்ற இந்நிகழ்வில், தூக்கநாயக்கன்பாளையம் கிராமத்தில் தங்கி விவசாயப் பணிகளைக் கற்றுவரும் வேளாண் மாணவர்கள், சமூக அக்கறையுடனும் சுறுசுறுப்புடனும் பள்ளி வளாகத்தைச் சுற்றி 50-க்கும் மேற்பட்ட (50+) மரக்கன்றுகளை நட்டனர்.

இன்று (06.10.2026) காலை 11 மணியளவில் நடைபெற்ற விழா-விற்கு, வனச்சரக அலுவலர் ஜான் பீட்டரிடம், முன்அனுமதி பெற்று மரக்கன்றுகள் பெறப்பட்டன. பள்ளித் தலைமை ஆசிரியர் ராதா கிருஷ்ணனின் அனுமதி மற்றும் வழிகாட்டுதலின்படி, ஜே.கே.கே. முனிராஜ் வேளாண் கல்லூரி மாணவர்கள் இந்த நிகழ்ச்சியை மிக நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்தனர். இதில் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வத்துடன் பங்கேற்று கல்லூரி மாணவர் களுக்குத் தோளோடு தோள் நின்று கன்றுகளை நட்டனர்.

இவ்விழாவில் சுற்றுச்சூழலுக்கும் மக்களின் ஆரோக்கியத் திற்கும் உகந்த வேம்பு, செம்மரம், ஈட்டி (Rosewood) மற்றும் தேக்கு ஆகிய 4 முக்கிய வகை மரங்கள் தேர்வு செய்து நடப் பட்டன. இதில் இயற்கையின் கிருமி நாசினியாகச் செயல்பட்டு காற்றைச் சுத்திகரிக்கும் வேம்பு, மண் அரிப்பைத் தடுத்து மூலிகை மதிப்புமிக்க செம்மரம், மிக உயர்ந்த வணிக மதிப்பும் உறுதியும் கொண்ட ஈட்டி மரம் மற்றும் அதிக அளவில் ஆக்சிஜன் வெளியீட்டுத் திறனுடன் கூடிய வலுவான தேக்கு மரக்கன்றுகள் சூழலுக்கு ஏற்றவாறு தேர்வு செய்து நட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் வனச்சரக அலுவலர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசுகையில், வேளாண் கல்லூரி மாணவர்கள் தங்களது பயிற்சிக்காலத்தில் வகுப்பறை யோடு நின்றுவிடாமல், இதுபோன்று சமூகத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் பயன்தரும் உயரிய பணிகளில் ஈடுபடுவது மிகவும் போற்றத்தக்கது என்றும், மாணவர்களின் இந்தத் தீவிர முயற்சியும் அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியவை என்றும் தெரிவித்தனர். மேலும், இவர்கள் விதைத்த இந்த பசுமை முயற்சி, பள்ளி மாணவர் களிடையே மரங்களை வளர்க்கும் ஆர்வத்தைத் தூண்டுவதோடு, அவர்கள் மூலம் அவர்களின் குடும்பத்தினருக்கும் சுற்றத்தாருக்கும் விழிப்புணர்வை நல்கும் எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டனர்.




# நிலக்கடலை சாகுபடி செயல்முறைகள் குறித்து மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, அக்.6

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரம், வேளாண்மை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் நிலக் கடலை சாகுபடி செயல்முறைகள் குறித்து மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி சூரப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

பயிற்சிக்கு கொட்டாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் வளர்மதி தலைமையேற்று கொட்டாம்பட்டி வட்டாரத்தில் வேளாண் திட்டங்கள் மற்றும் நிலக்கடலை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ், பயிற்சியில் கலந்து கொண்டு நிலக்கடலையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் மேலாண்மை முறைகள் குறித்து தொழில்நுட்ப உரைகளை விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

இப்பயிற்சியில் கொட்டாம்பட்டி துணை வேளாண்மை அலுவலர் ரகுராமன், நிலக்கடலைக்கு தேவையான நுண்ணூட்டம் மற்றும் பேரூட்ட சத்துக்கள் குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப உரையாற்றினார். மேலும் இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜதுரை, உதவி தொழில்நுட்ப மேலாளர் கண்ணன், மற்றும் 40க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# FSSAI முதல் ஏற்றுமதி வரை அக்ரி Startup திருவிழா 3.0

திண்டுக்கல், அக்.6

ஈஷா மண் காப்போம் மற்றும் G.T.N. கல்விக் குழுமம் இணைந்து வழங்கிய அக்ரி Startup திருவிழா 3.0 FSSAI முதல் ஏற்றுமதி வரை என்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

விவசாயப் பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்களாக மாற்றி, அவற்றை தரமான முறையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து நிகழ்ச்சியில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டது.

நிகழ்ச்சியில் FSSAI (Food Safety and Standards Authority of India), உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள், FSSAI பதிவு மற்றும் உரிமம், உணவு சுகாதாரம், GMP, GHP, ஆய்வகப் பரிசோதனை, COA, Shelf Life, Packaging மற்றும் Labelling ஆகியவை குறித்து விளக்கப்பட்டது. உணவுப் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதுடன், அவற்றின் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நம்பிக்கையை நிலைநாட்டுவதில் FSSAI முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், விவசாயப் பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட் களாக மாற்றுவதன் மூலம் அதிக சந்தை வாய்ப்புகளை உருவாக்கலாம் என எடுத்துரைக்கப்பட்டது. மாம்பழம் போன்ற வேளாண் விளைபொருட்களில் இருந்து Mango Pulp, Mango Powder, Dried Mango, Mango Bar, Mango Jam உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் குறித்து விளக்கப்பட்டது.

HACCP முறையின் மூலம் உணவில் ஏற்படக்கூடிய உயிரியல், வேதியியல் மற்றும் இயற்பியல் அபாயங்களை முன்கூட்டியே கண்டறிந்து கட்டுப்படுத்துதல், Traceability மூலம் மூலப்பொருளின் தொடக்கம் முதல் நுகர்வோர் வரை பொருளின் பயணத்தைப் பதிவு செய்தல் மற்றும் தேவையான போது Batch-wise Recall நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்தும் விளக்கப்பட்டது.

ஏற்றுமதி தொடர்பாக IEC (Importer Exporter Code), APEDA அல்லது சம்பந்தப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகள், Product-specific Testing, Export Packaging, Labelling மற்றும் Export Documentation ஆகியவற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், FSSAI Licence என்பது Export Licence அல்ல என்றும், ஒவ்வொரு சான்றிதழுக்கும் தனித்தனி நோக்கம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு Agri Startup-க்கான ஏற்றுமதி பயணம் Product → Target Country → Market Requirements → FSSAI → APEDA/Relevant Body → Testing → Packaging → Labelling → Certification → Export என்ற முறையில் திட்டமிடப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

விவசாயிகள் மற்றும் இளம் தொழில்முனைவோர் முதலில் ஏற்றுமதிக்கான சான்றிதழ்களைத் தேடுவதற்கு பதிலாக, தங்களது தயாரிப்பு, இலக்கு சந்தை, சட்ட விதிமுறைகள், உணவுப் பாதுகாப்பு, தரப்பரிசோதனை, பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் ஆகியவற்றை முறையாக திட்டமிட்டு செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக, விளைவிப்போம்! மதிப்புக் கூட்டுவோம்! Brand உருவாக்குவோம்! சந்தையை வெல்வோம்! என்ற கருத்தை முன்னிறுத்தி, விவசாயப் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் மற்றும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை உருவாக்குவது வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வு விவசாயிகள், உணவுத் தொழில்முனைவோர் மற்றும் இளம் Startup நிறுவனங்களுக்கு உணவுப் பாதுகாப்பு முதல் ஏற்றுமதி வரையிலான செயல்முறைகளை அறிந்து கொள்ள பயனுள்ள வழிகாட்டியாக அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.6

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் 05.10.26 அன்று வாடிப் பட்டியில் உள்ள TAFE டிராக்டர் நிறுவனத்தில் பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு மதுரை, வேளாண்மை இணை இயக்குநர் (பொ), அ.இராணி, கலந்து கொண்டு விவசாய பயன்பாட்டிற்கு உபயோகப்படும் அனைத்து விதமான வேளாண் கருவிகள் அவற்றின் பயன்பாடுகள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன், தற்போது நடைமுறையில் உள்ள விவசாய அடையாள எண், மின்னணு பயிர் கணக்கீடு மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் மானிய விபரங்களை விளக்கினார். TAFE மேலாளர் G.சண்முகசுந்தரம், டிராக்டர் உபயோகத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய விதிமுறைகள், டிராக்டர் பராமரிப்பு முறைகள், எரிபொருள் பயன்பாட்டு திறனை அதிகரித்தல் குறித்து விவரித்து, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தீர்வு அளித்தார். பின்னர் டிராக்டர் உற்பத்தி மையத்தினை விவசாயிகள் அனைவரும் உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் பார்வையிட்டனர். TAFE நிறுவன முதுநிலை மேலாளர் N.சரவணன், நெல் மற்றும் தென்னை விவசாயத்தில் பூச்சி நோய் மேலாண்மை, அங்கக வேளாண்மை மற்றும் காய்கறி உற்பத்தி முறைகளை விளக்கினார். விவசாயி களுக்கு TAFE நிறுவனத்தில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு டிராக்டர்கள் மற்றும் இணைப்புக் கருவிகள் குறித்து நேரடி செயல் விளக்கம் விவசாயிகள் மூலமாக செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை TAFE நிறுவன அலுவலர் S.முத்துவிக்னேஷ், உதவி வேளாண்மை அலுவலர்கள் கதிரவன் மற்றும் பிரபு, ATMA திட்ட பணியாளர்கள் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், எஸ்.கே.ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர் பால முருகன் மற்றும் ஸ்ரீ ஹரிணி ஆகியோர் செய்திருந்தனர்.

# வாலிகண்டபுரம் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஒரு நாள் வேளாண்மை பயிற்சி




பெரம்பலூர், அக்.6

பெரம்பலூர் மாவட்டம், தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் வாலிகண்டபுரம் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஒரு நாள் வேளாண்மை பயிற்சி மற்றும் செய்முறை விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் மாணவர்களுக்கு நவீன வேளாண்மை தொழில்நுட்பங்கள், நிலையான வேளாண்மை, இயற்கை வேளாண்மை முறைகள், பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள், வேளாண்மையில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து, மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பல்வேறு வேளாண் செயல்விளக்கத் திடல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பயிர் சாகுபடி, தோட்டக்கலைப் பயிர்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடி செய்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மாணவர்கள் ஆர்வத்துடன் பயிற்சியில் பங்கேற்று, வேளாண்மை தொடர்பான தங்களது சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டறிந்தனர். இந்நிகழ்ச்சி மாணவர் களிடையே வேளாண்மை குறித்த ஆர்வத்தையும், வேளாண் உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப அறிவையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

இந்நிகழ்ச்சியை தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் உதவி பேராசிரியர் ராமதாஸ் (தோட்டக் கலைத் துறை), பரமேஸ்வரி (மண்ணியல் துறை), முனைவர் அக்லினோ நவீன் (சுற்றுச்சூழல் துறை) மற்றும் முனைவர் மணிகண்டன் (பூச்சியியல் துறை) ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

# விதைகளைப் பாதுகாப்பது எப்படி?

சேலம், அக்.6

சேலம் மாவட்ட விவசாயிகளே, ஒரு விதை தான் பெரும் விருட்சம் ஆகும் என்பது பழமொழி.

விதையின் ஆரோக்கியமே விவசாயத்திற்கு அடிப்படையானது. அவ்வாறு மிக முக்கியத்துவம் வாய்ந்த விதைகளை மிகவும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தற்போது புயல் காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளதாலும், சேமித்து வைத்துள்ள விதையின் ஈரப்பதம் அதிகமாகி பூச்சிகள், வண்டுகள் மற்றும் பூஞ்சான நோய்கள் தாக்க அதிக வாய்ப்புள்ளது. எனவே கீழ்க்காணும் முறையான வழிகளைக் கையாண்டு பூச்சி மற்றும் பூஞ்சான தாக்குதலைக் கட்டுப்படுத்தி விதையின் தரத்தினை பாதுகாக்கலாம்.

புதிய கோணிப்பைகளையே விதைகளை சேமித்து வைக்க பயன்படுத்த வேண்டும். உடைந்த தானியங்கள் மற்றும் சிதறிய தானியங்கள், குப்பைகள் இல்லாமல் விதை சேமித்து வைக்கும் அறையினை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். விதை சேமிக்கும் அறையினை வேம்பு கரைசல் கொண்டு மொழுக வேண்டும்.

சேமிக்கும் தானியங்களின் ஈரப்பதமானது, நெல்லாக இருப்பின் 13% மிகாமலும், சிறுதானியங்களாக இருப்பின் 12% மிகாமலும், பயறுவகை மற்றும் நிலக்கடலையாக இருப்பின் 9% மிகாமலும் இருக்க வேண்டும். பயறுவகை விதையாக இருப்பின் 1 கிலோவிற்கு 10துயி வேப்ப எண்ணெய் அல்லது 10 கிராம் ஊக்குவிக்கப்பட்ட களிமண் அல்லது செம்மண் கலந்து சேமித்து வைக்கலாம்.

மேற்காணும் முறைகளைக் கையாண்டு, விதை சேமிக்கப்படும் பட்சத்தில் விதையினை பூச்சி மற்றும் நோய் தாக்காமலும், முளைப்புத்திறன் குறையாமலும் பாதுகாக்கலாம். இவ்வாறு சேமிக்கப்படும் விதையின் தரத்தினை விதைப்பதற்கு முன் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், 4வது தளம், அறை

எண் 403, சேலம் 636 001 முகவரியில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் நேரில் கொண்டு வந்து கொடுத்தோ அல்லது தபால் மூலாகவோ அனுப்பி பரிசோதனை செய்து விதையின் தரத்தினை அறிந்து கொண்டு அதன் பிறகு விதைப்பு மேற்கொள்ளுமாறு சேலம் மாவட்ட விவசாயிகளை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒரு மாதிரிக்கான பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும் எனவும் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் பெ.கவிதா மற்றும் மு.நந்தினி கேட்டுக் கொள்கிறார்கள்.




# இப்கோ உர சீர்திருத்த விழிப்புணர்வு விழா

மயிலாடுதுறை, அக்.6

மயிலாடுதுறை மாவட்டம், கீழையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் வடவலம் கிராமத்தில் உர சீர்திருத்த விழிப்புணர்வு விழா இப்கோ கள அதிகாரி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சமச்சீர் உரப்பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு, நானோ மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு, இரசாயன உரப்பயன்பாட்டைக் குறைப்பதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நானோ உரங்களை விதை நேர்த்தி முதல் இலைவழித் தெளிப்பு வரை பயன்படுத்தும் முறைகள், ட்ரோன் தொழில் நுட்பம் மூலம் துல்லியமான உரத்தெளிப்புமற்றும் விவசாயி களுக்கான சங்கட் ஹரன் காப்பீட்டுத் திட்டம் குறித்தும் விளக்கப்பட்டது.

மேலும், உரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சீர்திருத் தங்களான வேம்பு தடவிய யூரியா, நானோ உரங்கள் மற்றும் இயற்கை பொட்டாஷ் பயன்பாட்டை ஊக்குவித்தல், பிரதமரின் விவசாய செழுமை மையங்கள் (PMKSK), ஒரே நாடு ஒரே உரம் (Bharat Brand), PM PRANAM, ட்ரோன் தொழில் நுட்பம், பசுமை அமோனியா, iFMS–DBT மற்றும் AgriStack ஒருங்கிணைப்பு, NIPU 2026 உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப் பட்டது.

மண்வளத்தைப் பாதுகாத்து, உரப்பயன்பாட்டைச் சீரமைத்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில் உர சீர்திருத்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.





Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**